# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஜூன் 24, 2024 Weekly E-paper • June 24, 2024



## திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் 15ஆம் பொதுக்குழு!

## கள்ளக்குறிச்சியே கடைசியாகட்டும்..!

தலையங்கம்

## அம்பலப்பட்டுப் போன ‘நீட்’ தேர்வை ரத்து செய்!

நெல்லை பாபு

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஜூன் 24, 2024    Weekly E-paper ● June 24, 2024


# திராவிட இயக்கக் தமிழர் பேரவையின் 15ஆம் பொதுக்குழு!

**திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் 15ஆம் செயற்குழு/ பொதுக்குழுக் கூட்டங்கள் 22 மற்றும் 23-06-2024 ஆகிய தேதிகளில் திருச்சி ரவிமினி ஹாலில் நடைபெற்றது. இப்பொதுக் குழுவுக்குத் திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் தலைமை தாங்கினார். பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ் தொடக்கவுரை ஆற்றினார். திருச்சி மாவட்டச் செயலாளர் மனிவண்ணன் வரவேற்புரையைத் தொடர்ந்து, தலைமை நிலையச் செயலாளர் எட்வின் தொகுப்பரையும், கூட்ட நிறைவில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.இளங்கோவன் நன்றியுரையுடன் பொதுக்குழு நிறைவு பெற்றது. இக்கூட்டத்தில் ஐந்து தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.**

## நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள்

**தீர்மானம் 1:** சாதி ஒழிப்பு, தீண்டாமஒழிப்புப் போராட்டங்களை முன்னெடுக்கும் அனைத்து இயக்கங்களுக்கும், பேரவை தன் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அந்த இயக்கங்களுக்கு என்றென்றும் துணை நிற்கும் என்றும் உறுதி கூறுகிறது!

**தீர்மானம் 2:** நீட் தேர்வை விலக்கக் கோரி, தமிழ் நாடு எங்கும் ஆர்ப்பாட்டங்கள், பரப்புரைகள் செய்வதென்றும், முதல் கட்டமாக வரும் ஜூலை 15 அன்று, சென்னை, கோவை ஆகிய மாநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்படுகிறது.

**தீர்மானம் 3:** சுயமரியாதை இயக்க நூற்றாண்டை ஒட்டி, தமிழ்நாடு எங்கும் பொதுக்கூட்டங்கள், கருத்தரங்குகள் நடத்துவதென்றும், சிறப்பு மலர் ஒன்று வெளியிடுவதென்றும் தீர்மானிக்கப்படுகிறது.

**தீர்மானம் 4:** வரும் ஜூலை 5ஆம் தேதி வெளியிடப்பட இருக்கும், சாதி வெறியைத் தூண்டும் கவுண்டம்பாளையம் என்னும் திரைப்படம், சாதி வெறியனான தன்னால் எடுக்கப்படுகிறது என்று கூறியுள்ள அப்படத்தின் இயக்குனர், நடிகர் ரஞ்சித்தைக் கண்டித்தும், அந்தப் படத்தை உடனடியாகத் தடை செய்ய வேண்டும் என்று கோரியும் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

**தீர்மானம் 5:** வரும் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில், திமுக வேட்பாளர் அன்னியூர் சிவா வெற்றிக்கு முழுமையாகப் பாடுபடுவது என்று தீர்மானிக்கப்படுகிறது!



தொடர்ச்சி அடுத்தபக்கம்...

முன்பக்கத் தொடர்ச்சி...

















## திராவிடப்பள்ளி, கோவை சந்திப்பு 16-06-2024




கோவையில் 16-06-2024 அன்று நடைபெற்ற திராவிடப்பள்ளி பயிற்சி வகுப்பில் புலவர் செந்தலை கவுதமன், சட்டமன்ற உறுப்பினர் எழிலன், திமுக செய்தித் தொடர்பாளர் சூரியா கிருஷ்ணமூர்த்தி பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், பொள்ளாச்சி உமாபதி, தோழர்கள் எட்வின், கார்த்தி, வெற்றிச் செல்வன், மதிவாணன், லோகபாலன் திராவிடப்பள்ளி மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## கள்ளக்குறிச்சியே கடைசியாகட்டும்..!

கள்ளக்குறிச்சி விஷச்சாராயம் அருந்தியதன் விளைவால் 55 பேர்கள் மரணம் அடைந்துள்ளனர் என்றும், நூற்றுக்கும் மேற்பட்டோர் சேலம், விழுப்புரம், ஜிப்மர் மருத்துவ மனைகளில் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள் என்றும் வருகிற செய்திகள் பெரும் அதிர்ச்சியைத் தருகிறது.

தகவல் கிடைத்தவுடன் தமிழ்நாடு முதல்வர் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணை பிறப்பித்துள்ளார்.

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியம், எ.வா. வேலு ஆகியோரை உடனே கள்ளக்குறிச்சிக்கு அனுப்பி, பாதிக்கப் பட்டோருக்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியைத்தடுக்கத் தவறிய உயர்மட்ட காவல் அதிகாரிகள் உள்பட பதவி இடைநீக்கம், காத்திருப்போர் பட்டியல் என துறைரீதியான நடவடிக்கையை மேற்கொண்ட தோடு, மாவட்ட ஆட்சியரும் இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளார்.

கள்ளச் சாராய குற்றவாளிகளை இரும்புக்கை கொண்டு அடக்குவேன் என்று சட்டமன்றத்தில் அறிவித்தார். சி.பி.சி.ஐ. டி விசாரணைக்கும் ஆணையிட்டு உள்ளார் அவர்.

சம்பவம் நடந்த பகுதியில் காவல் நிலைய அதிகாரிகள், காவலர்கள் உள்பட காட்டிய அலட்சியம் பல உயிர்களைப் பலி வாங்கிவிட்டது. குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

இறந்த குடும்பத்தினருக்கும், சிகிச்சை பெறுபவர்களுக்கும் நிதிஉதவி அறிவித்து இருப்பதுடன் அவர்களின், இறந்தவர்களின் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்தும் கவனத்தில் எடுத்துள்ளார்.

என்னதான் காரணம் சொன்னாலும் ஒவ்வொரு உயிரும் விலைமதிப் பற்றது. இனியும் யாருடைய உயிரும் போகக்கூடாது.

இதற்கு முன்னர் இதுபோன்ற நிகழ்வுகள் தமிழ்நாட்டில் நடந்துள்ளது என்று சொல்லி இச்சம்பவத்தை ஒப்பீடு செய்ய முடியாது.

இனிவரும் காலங்களில் மீண்டும் கள்ளச்சாராய மரணங்கள் நிகழக்கூடாது.

அரசு உரிய நடவடிக்கைகளை, உறுதியுடன் செயல்படுத்த வேண்டும்.

பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் சொல்வதுபோல, "கள்ளக்குறிச்சியே கடைசியாக இருக்கட்டும்"!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408






# அம்பலப்பட்டுப் போன ‘நீட்’ தேர்வை ரத்து செய்!

**நெல்லை பாபு**

“தரமான மருத்துவர்களை உருவாக்கப் போகிறோம், அரசியல் அதிகாரக் குறுக்கீடற்ற நேர்மையான தகுதித்தேர்வை நடத்தப்போகிறோம்” எனத் தம்பட்டம் அடித்து ஒன்றிய பாஜக கொண்டுவந்த NEET தேர்வில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் முறைகேடுகளும், அது குறித்து வரும் அடுக்கடுக்கான புகார்களும் “NEET ஒரு தகுதியற்றத் தேர்வு” என்ற உண்மையை உணர்த்தி இருக்கின்றன.

நீட்டுக்கெதிராக இந்தியாவிலேயே முதல் குரலை எழுப்பியது தமிழ்நாடும், திராவிட முன்னேற்றக் கழகமும் தான். நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டுமென்றும், பனிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையிலேயே மருத்துவ மாணவர் சேர்க்கையை நடத்த வேண்டுமென்றும் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றது.



வேறு எந்த மாநிலத்திலும் பெரிதாக எதிர்ப்புக் குரல் வராத போதும், தமிழ்நாடு முழுவதும் நீட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், கண்டனப் பொதுக் கூட்டங்கள், கருத்தரங்கங்கள் என மக்கள் மன்றத்திலும், இரண்டுமுறை நீட் தேர்வுக்கு எதிராகச் சட்டமன்றத்தில் தீர்மானங்கள் என நீட் எதிர்ப்பில் உறுதியாக நிற்கிறது திமுகவும், திராவிட இயக்கங்களே.

2021 ஆம் ஆண்டு மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஆர்கே எஜுகேஷன் கேரியர் கைடன்ஸ் நிறுவனம் ஒவ்வொரு மாணவரின் பெற்றோரிடமும் ரூபாய் 50 லட்சம் வாங்கிக் கொண்டு ஆள்மாறாட்டம் செய்து நீட் தேர்வு எழுதியது அப்போது அம்பலமானது. இது தொடர்பாக சிபிஐ வழக்கு விசாரணையை நடத்தி வருகிறது.

பீகாரில் நீட் தேர்வு வினாத்தாள் கசிந்ததாகவும், ஒரு மாணவருக்கு ரூ.30 லட்சம் வரை பெறப்பட்டதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. நீட் தேர்வில் முறைகேடுகள் நடந்திருப்பதாகவும், இதுகுறித்து விசாரணை நடத்த வேண்டும் என்றும் நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. மேலும் இது தொடர்பாக பலர் கைது செய்யப்பட்டும் வருகின்றனர்.

இதைப் போல குஜராத்தின் பன்ச்மகால் மாவட்டத்தில் தனியார் பள்ளி ஒன்றில் கடந்த மே 5ஆம் தேதி நடைபெற்ற நீட் தேர்வில் முறைகேடு நடப்பதாக மாவட்ட ஆட்சியருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இந்தத் தகவலின் அடிப்படையில் மாவட்டக் கல்வி அதிகாரியுடன் அங்கு முழுமையாக விசாரணை நடத்தியுள்ளார் மாவட்ட ஆட்சியர். அப்போது தனியார் பள்ளியின் இயற்பியல் ஆசிரியரான துஷார்பத், நீட் தேர்வு மைய துணைக் கண்காணிப்பாளராக நியமிக்கப் பட்டுள்ளார். இவர் மாணவர்களுக்கு உதவுவதாகக் கூறி, பேரம் பேசியிருக்கிறார். இவருக்கு உதவியதாக மேலும் இரண்டு பேர் மீதும் வழக்குப் பதிவு செய்யப் பட்டுள்ளது.

இவரது காரிலிருந்து மாணவர்களின் பெற்றோர் அளித்த ரூ.7 லட்சம் பணம் பறிமுதல் செய்துள்ளனர் காவல் துறையினர். அதன்படி, பதில் தெரியாத விடைகளை மாணவர்கள் வெறுமனே விட்டுவிட்டுச் செல்லும்படியும், விடைத்தாள்கள் பெற்றபிறகு மோசடியாளர்கள் அதனைப் பூர்த்தி செய்வதாகவும் பேரம் பேசப்பட்டுள்ளது. துஷார்பத்தின் அலைபேசியில் தேர்வு எழுதும் 16 மாணவர்கள் பெயர்கள், அவர்களது தேர்வு எண்கள் ஆகியவை இருந்துள்ளன. மாணவர்கள் நீட் தேர்வில் நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற, ஒரு மாணவருக்கு 10 லட்ச ரூபாய் பேரம் பேசப்பட்டு, முன்பணமாகத் தரப்பட்ட 7 லட்ச ரூபாய் பணமும் துஷாரின் வாகனத்திலிருந்து கைப்பற்றப்பட்டு அவர் கைது செய்யப் பட்டுள்ளார். மேலும் இந்த ஆண்டு, 12 ஆம் வகுப்பு இயற்பியல் தேர்வில் 1 மதிப்பெண் பெற்ற மாணவி நீட் தேர்வில் முழு மதிப்பெண்களையும் பெற்று வெற்றி பெற்றுள்ளது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த நூற்றாண்டில் சமஸ்கிருதத்தை தூக்கிப் பிடித்தவர்கள் இப்போது நீட்டைத் தூக்கிப் பிடிக்கிறார்கள். ஆக, ஆர்எஸ்எஸ், பாஜக, சங் பரிவாரங்கள் தூக்கிபிடிக்கிற எந்த ஒன்றும் மனித குலத்திற்கு எதிரானது, ஜனநாயத்திற்கு ஆபத்தானது என்பதற்கு நீட் தேர்வே சான்று!.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian